**CC 59/21 30.10.2025**

PW 1, ராஜேந்திரன் த/பெ. கருப்பையா

( **சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது** ).

**எதிர்மனுதாரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்களும் எதிரிகளால் ஏற்பட்ட காயம் இல்லை என்றால் சரியல்ல. நான் ஆக்ரோசமாக கல்லுக்காலில் மோதியதால் ஏற்பட்ட காயம் என்றால் சரியல்ல. எதிரிகளின் இடத்தில் நிரந்தர பாதை பெற வேண்டும் என்பதற்காக கலந்து ஆலோசித்து அவர்களின் மீது வழக்கு பதிவு செய்து, மிரட்டி பாதை பெறுவதற்காக பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**( மறுவிசாரணை இல்லை. )**